ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2110/43 - 2019 පෙබරවාරි මස 14 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.02.14
2110/43 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: RPDS/LND/09/ACQ/21(VE).
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/8/2016/VE/256.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டத்தில், இரத்தினபுரி பிரதேச செயலாளர் பிரிவில், 164A, பபரபொடுவ கிராம அலுவலர் பிரிவில் பலந்தகம கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட கடத்திரல் வரைபட இல. 423, துண்டு இல. 113 மற்றும் 114 என்று குறிப்பிடப்பட்டுள்ள 4.8565 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய இரு (02) காணித் துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு :

**01. துண்டு இல. 113**

காணியின் பெயர் : பொதுஅடதென்னை மூகலான ; விபரம்: தோட்டம் ; உரிமை கோருபவர் : ஹபுகஸ்தென்ன பயிர்ச்செய்கை கம்பனி, இல. 95/ஏ, நம்ப்பான, இங்கிரிய; விஸ்தீரணம்: 4.3285 ஹெக்டயார்.

**02. துண்டு இல. 114**

காணியின் பெயர் : பொதுஅடதென்னை மூகலான ; பயன்பாடு : தோட்டம் ; உரிமை கோருபவர் : ஹபுகஸ்தென்ன பயிர்ச்செய்கை கம்பனி, இல. 95/ஏ, நம்பபான, இங்கிரிய; விஸ்தீரணம்: 0.5280 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆந்திகதி மு. ப. 10.00 மணிக்கு இரத்தினபுரி பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மைகளையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 21 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஐ. ஆர். எம். பிரதீபிகா டீ. இலுக்கும்புர,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
இரத்தினபுரி,
2019, சனவரி 30.

3 - 141

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 3/6/2016/8.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-201/36/ඒවඩබ්/111.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

மேலதிக வர்த்தமானி இல. 2008/39 மாச்சு 2017, 3 ஆந் திகதியில் சேர்க்கப்பட்ட துண்டு இல. 498 நீங்கலாக காணி எடுத்தற் சட்டம் 7ஆம் பிரிவின் 125 ஆம் அறிவிப்பின் கீழ்க்காணும் துண்டு இல. 590, 591, 592 மற்றும் 593 இணைக்கப்பட்டுள்ளது.

**1. துண்டு இல. 590**
காணியின் பெயர்: கல்மொரதுகஹாமுல கேன மற்றும் கோங்கஹாமுலகேன; விபரம்: தோட்டம் மற்றும் கலப்புப் பயிர்ச் செய்கை; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: ஈ.எம். சோமாவதி, ஏ.எம்.சி.என். குமார, ஏ.எம்.எம். குமார மற்றும் ஏ.எம்.வீ. தில்ருக்சி குமாரி; விஸ்தீரணம்: 0.0166 ஹெக்டயார்.

**2. துண்டு இல. 591**
காணியின் பெயர்: கல்மொரதுகஹாமுல கேன மற்றும் கோங்கஹாமுல கேன; விபரம்: தோட்டம் மற்றும் கலப்புப் பயிர்ச் செய்கை; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: ஏ.எம்.சி.என். குமார; விஸ்தீரணம்: 0.0166 ஹெக்டயார்.

**3. துண்டு இல. 592**
காணியின் பெயர்: கல்மொரதுகஹாமுல கேன மற்றும் கோங்கஹாமுல கேன; விபரம்: தோட்டம் மற்றும் கலப்புப் பயிர்ச் செய்கை; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: ஏ.எம்.எம். குமார; விஸ்தீரணம்: 0.0400 ஹெக்டயார்.

**4. துண்டு இல. 593**
காணியின் பெயர்: கல்மொரதுகஹாமுல கேன மற்றும் கோங்கஹாமுல கேன; விபரம்: தோட்டம் மற்றும் கலப்புப் பயிர்ச் செய்கை; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: ஏ.எம்.சி.என். குமார; விஸ்தீரணம்: 0.0400 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி பொல்கஹாவெல பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் 9 ஆம் பிரிவின் கீழ் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 05 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

விசாரணைக்கு உரிமை கோருபவரினால் முகவராக அனுப்பப்படுபவர் உரிமை குறித்தொதுக்கப்பட்டமையை கடிதம் மூலமாக நிரூபிக்கப்படாவிட்டால் முகவராக அனுப்பப்படுபவரின் கூற்று அல்லது சாட்சிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதை குறித்து கவனம் செலுத்தவும்.

டி. அனோமா திஸ்ஸாநாயக்க,
பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
பொல்கஹாவெல.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
பொல்கஹாவெல.

3 - 142

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.